**கவனிக்க.**- *2018.12.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி III மற்றும் பகுதி IV (அ)ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2104 - 2018 දෙසැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2018.12.28

*2104 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

***(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)***


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2019, சனவரி மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, சனவரி மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1 - 81481- 5403(2018/12)

# பதவிகள் - வெற்றிடம்

## மீரிகம பிரதேச சபை

மேல் மாகாண சபை அரசாங்க சேவை வெற்றிடங்களை நிரப்புதல்

மேல்மாகாண சபையின் மீரிகம பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட் சேர்ப்பதற்காக தகுதியுடையவர்கள் மேல் மாகாண சபை எல்லைக்குள் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் இங்கு காட்டப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப நிரப்பப்பட்டு கல்விச் சான்றிதழ்கள், தொழிற் தகைமைச் சான்றிதழ்கள். வதிவிட சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் "செயலாளர், மீரிகம பிரதேச சபை, மீரிகம" என்ற முகவரிக்கு 2019.01.25 ஆந் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "(பொருத்தமான)" பதவி சம்பந்தமான விண்ணப்பம் என்று குறிப்பிட வேண்டும். சரியாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவங்கள் செல்லுபடியற்றதாக்கப்படும் என்பதுடன் அது சம்பந்தமாக எதுவித அறிவித்தலொன்றும் அனுப்பப்பட மாட்டாது.

ஏற்கனவே அரச/மாகாண சபை நிறுவனங்களில் சேவையிலீடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் திணைக்களத் தலைவரினூடாக தமது விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளமுறை | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | சாரதி (ஆரம்ப கைவினை III ஆம் வகுப்பு ) | 03 | PL-3 - 2016<br>ரூ. 25,790.00-10X270-10X 300 -10X330-12X350- ரூ. 38,990.00<br>3 ஆவது சம்பளப்படி நிலைக்குச் செல்வதற்கு முன்னர் வினைத் திறன் தடைகாண் பரீட்சை உண்டு. | குறிப்பு இலக்கம் 01ஐ ப்பார்க்க. |
| 2 | துறைசார் வேலையாட்கள் (ஆரம்ப கைவினை இல்லாத III ஆம் வகுப்பு) | 06 | PL-2 - 2016<br>ரூ. 24,250.00-10X250-10X270-10X300-12X330- ரூ. 36,410.00<br>3 ஆவது சம்பளப்படி நிலைக்குச் செல்வதற்கு முன்னர் வினைத் திறன் தடைகாண் பரீட்சை உண்டு | ஆகக் குறைந்தது 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 3 | சுகாதாரர வேலையாட்கள் (ஆரம்ப கைவினை இல்லாத III ஆம் வகுப்பு ) | 05 | PL-1 - 2016<br>ரூ. 24,250.00-10X250-10X270 -10X300-12X330-ரூ.36,410.00<br>3 ஆவது சம்பளப்படி நிலைக்குச் செல்வதற்கு முன்னர் வினைத் திறன் தடைகாண் பரீட்சை உண்டு | ஆகக்குறைந்தது 8ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 4 | மின் தொழில்நுட்ப வியலாளர் (ஆரம்ப - இடைக்கால கைவினை III ஆம் வகுப்பு ) | 01 | PL-2 - 2016<br>ரூ.25,250.00-10X270-10X300-10X330-12X350- ரூ. 38,450.00<br>மட்டுப்படுத்தப்பட்ட ஆட் சேர்ப்பு 03 ஆவது சம்பளப்படி நிலைக்குச் செல்வதற்கு முன்னர் வினைத்திறன் தடை காண் பரீட்சையுண்டு | க.பொ.த. (சா.த.) திறமைச்சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் 06 பாடங்களில் சித்தி. (இதில் 05 பாடங்களில் ஒரே தடவை சித்தியடைந் திருத்தல் அவசியம்.) இப் பதவிக்காக குறித்துரைக் கப்பட்ட மற்றும் தொழிற்தகைமை தேசிய தொழிற்றிறமையில் (NVQ) குறைந்தபட்சம் 2 ஆம் தர நிபுணத்துவம் ஒன்று பெற்றிருப்பது அல்லது குறைந்தபட்சம் 06 இக்கு குறையாமல் இதே |

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளமுறை | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | தொழிலில் அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழின் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும். மாகாண சபை நிறுவன மொன்றில் ஆரம்ப தரத்திலான பதவி யொன்றில் நிரந்தரமாக்கப்பட்டு ஐந்து வருடங்கள் பூர்த்தியாகியுள்ள மற்றும் குறிப்பிட்ட வினை திறமைகாண் பரீட்சையில் சித்தியடைந்து 05 வருடங் களைப் பூர்த்திசெய்த ஒருவராக இருத்தல் அவசியம் |
| 5 | முன்பள்ளி ஆசிரியை முகா/உத தொழில்நுட்ப அல்லாத காண்ட - 2 III தரம்) | 02 | MN-1 - 2016 ரூ.27,140.00-10X300-11X350-10X495-10 X660- ரூ. 45,540.00 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு 03 ஆவது சம்பளப்படி நிலைக்கு செல்வதற்கு முன்னர் வினைத் திறன் தடை காண் பரீட்சை உண்டு. | க.பொ.த. பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல், மொழிக்கும் கணிதத்துக்கும் திறமைச் சித்தி இரண்டு பெற்றிருத்தல் அவசியம். (இதில் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்). முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் அரசாங்க நிறுவனத் தினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட (பதிவு செய்யப்பட்ட) முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனமொன்றினால் சிறுவர் கல்வி மற்றும் சிறுவர் அபிவிருத்தி சம்பந்தமான 06 மாதங்களுக்குக் குறையாத கற்கை நெறியொன்றினை பூர்ததி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் அவசியம். குறிப்பிட்ட மாகாண சபை நிறுவனத்தில் ஆரம்ப சேவைப் பிரிவில் சம்பளம் பெறுகிற நிரந்தர சேவையையுடைய மற்றும் 05 வருட செயற்பாடு மற்றும் திருப்திகரமான சேவைக்காலமொன்றி னையுடைய ஒருவராக இருத்தல் என்பதுடன். இக்கால கட்டத்தில் எதுவித நடத்தைக்கேடான தண்டனை பெற்றி ருத்தல் கூடாது. எழுத்துப் பரீட்சை ஒன்றிற்கு தோற்ற வேண்டும் (குறிப்பு இல. 02) |

*குறிப்பு இல. 01*

1. **சாரதிப் பதவிக்காக பூரணப்படுத்தப்பட வேண்டிய கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

(i) க.பொ.த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி உட்பட இரண்டு (2) திறமைச் சித்திகளுடன் இரண்டு அமர்வுக்கு மேற்படாமல் ஆறு (06) பாடங்களில் சித்தி (ஒரே தடவையில் குறைந்தது 05 பாடங்களில் சித்தி)

(ii) தனியார்/வாடகை வாகனம் அல்லது தாரப் பாரம் 24 அந்தருக்கு குறைவான ஸ்டேஷன்/வெகன் வாகனங்கள் ஓட்டுவது சம்பந்தமான மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட மோட்டார் வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றிருத்தல் (இப் பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும். திகதிக்கு 03 வருடங்களுக்கு முன்னர் குறைந்த பட்சம் “சீ” மற்றும் “சீ1” வாகன வகுப்புக்கான அனுமதிப்பத்திரம் அல்லது புதிய அனுமதிப்பத்திரத்திற்கேற்ப “பீ” வகுப்பு அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றிருத்தல் அவசியம்)

(iii) பெருந்தெருக்கள் சட்டம் சம்பந்தமான விரிவான அறிவொன்றினைப் பெற்றிருத்தல் அவசியம்;

(iv) ஓட்டுநர் உத்தரவுப் பத்திரம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் வாகன ஓட்டுநராக 03 வருட அனுபவம் இருத்தல் அவசியம்; (அனுபவத்தை உரிய முறையில் நிரூபிக்க வேண்டும்.)

(v) குறைந்த பட்சம் 5 அடி உயரமாக இருத்தல் வேண்டும்.

(vi) பகல் மற்றும் இரவு நேரங்களில் சேவையிலீடுபடுவதற்கான நல்ல உடல் தேகாரோக்கியம் காணப்பட வேண்டுமென்பதுடன், கண் பார்வை சிறப்பாகக் காணப்பட வேண்டும். அரச வைத்தியரொருவரினால் அத்தாட்சிப்படுத்திய சான்றிதழினால் நிரூபிக்கப்பட வேண்டும்.

தொழில்நுட்ப பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் ஆட்சேர்ப்பு இடம் பெறும்.

*குறிப்பு இல. 02*

*01. பரீட்சை/தொழில் பரீட்சை பற்றிய விபரம் - முன்னிலைப் பள்ளி ஆசிரியை*

| வினாத்தாள்/விடயம் | காலம் | மொத்த புள்ளி | அதிகுறைந்த சித்தி புள்ளி |
|---|---|---|---|
| திறமைசார்ந்த மற்றும் புத்திப் பரீட்சை | 01 மணி | 100 | 40 |
| பொது அறிவு | 01 மணி | 100 | 40 |

*02. பரீட்சைக்கான பாடத்திட்டம்*

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| திறமைசார்ந்த மற்றும் புத்திப் பரீட்சை | தர்க்க ரீதியானதும் கணித ஆற்றலும் மொழித் தேர்ச்சி |
| பொது அறிவு | இவ் வினாப்பத்திரம் பொருளாதார, சமூக, கல்வி, விஞ்ஞான, கலாசார, அரசியல் மற்றும் விளையாட்டுத் துறைக்கு ஏற்ற உள்நாடு, வெளிநாடு சார்பான முக்கிய நடைமுறை நிகழ்வுகள் பற்றி வேட்பாளரின் அறிவை மட்டிடும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரமாகும். |

**பொது நிபந்தனை**

1. இப் பதவியானது நிரந்தரமானது. இளைப்பாற்றுச் சம்பளத்துடன்.

2. விதவை/தபுதாரர் ஆண் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு தவணைப் பணம் செலுத்தல் வேண்டும்.

3. தேர்ந்தெடுக்கப்படுவோர் 03 வருட தகுதிகாண் காலத்துக்குட்படும். அக்காலத்தில் வேலை மற்றும் நடத்தை என்பவை சாதகமாக இருப்பின் தகுதிகாண் காலம் முடிவடைந்ததும் பதவி நிரந்தரமாக்கப்படும். அரச மற்றும் மாகாண சபைகளில் இப்போதே நிரந்தர சேவையைப் பெற்றுள்ளோருக்கு ஒரு வருட தகுதிகாண் காலமாக அமையுமாறே பதவியில் சேர்த்துக் கொள்ளப்படும்.

4. விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாதவாறும் இருத்தல் வேண்டும். (பிறப்புச் சாட்சிப் பத்திர பிரதி இணைக்கப்படல் வேண்டும்). ஏற்கனவே அரச/மாகாண சபைகளில் பதவியிலிருப்போருக்கு வயது எல்லை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

5. விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவு மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

6. திறமையான நல்லொழுக்கத்துடன் நல்ல தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு மாத காலத்திற்குள் அரச வைத்தியரொருவரினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு தோற்ற வேண்டுமென்பதுடன், அப்பரிசீலனையின் போது தேகாரோக்கியத்தில் குறைபாடு ஏதும் இருப்பின், பதவி நீக்கப்படும்.

7. தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றமொன்றில் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தல் ஆகாது.

8. விண்ணப்பப் படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 03 வருடங்கள் மேல் மாகாண எல்லைக்குள் பூர்ணமாக வசித்து வந்தவராக இருத்தல் வேண்டும். (பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்.)

9. அரச/மாகாண சபைகளின் சேவைகளிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தலாகாது என்பதுடன், பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 44/90 இன் கீழ் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவோராகவும் இருத்தலாகாது.

10. அரச மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**சேர்த்துக்கொள்ளும் முறை**

1. இப் பதவிக்காகக் கிடைக்கும் விண்ணப்பங்களை பரீட்சித்துப் பார்த்து தகுதி பெறும் விண்ணப்பதாரிகள் பொது நிர்வாக சுற்றறிக்கை 24/95 க்கு ஏற்ப நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவர்.

2. நேர்முகப் பரீட்சையில் கிடைக்கப்பெறும் பெறுபேறுகளின் அடிப்படையில் நிகழும் வெற்றிடங்களுக்கு ஏற்ப பதவிகள் நிரப்பப்படும்.

3. இவ்விண்ணப்பப் பத்திரங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் அல்லது மேல் மாகாணத்தில் இப் பதவிகளுக்கு ஏற்ற புது ஆட்சேர்ப்புமுறை விதிகள் திருத்தமாக்கல் மற்றும் விதிகளை சேர்த்தல், ஆட்சேர்ப்பை தாமதமாக்கல், மாற்றுதல் மற்றும் அறிவித்தலை ரத்துச் செய்தல் ஆகிய சகல அதிகாரங்களும் மீரிகம பிரதேச சபைச் செயலாளரைச் சாறும்.

கே. ஜயதிலக,
செயலாளர்,
மீரிகம பிரதேச சபை.

மீரிகம பிரதேச சபை அலுவலகம்,
2018, திசெம்பர் 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மீரிகம பிரதேச சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையில் மீரிகம பிரதேச சபையின் ................................................
பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : ..................................................................................................................................

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் : ..........................................................................................................

3. நிரந்தர முகவரி : ......................................................................................................................................................

4. பிறந்த திகதி : ..........................................................................................................
2019.01.25 ஆந் திகதிக்கு வயது: வருடங்கள் : ..................... மாதங்கள் : ............................ நாட்கள் : ............

5. நிரந்தர வதிவு மாவட்டம் : ...................................................................................................................................

6. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :............................................... தெலைபேசி இல. :...................................................

7. பால் (ஆண்/ பெண்) : ...........................................................................................................................................

8. வேறு தகைமைகள் (பிரதிகள் இணைக்கவும்) :
(i) கல்வித் தகைமை ;
(ii) தொழிற் தகைமை ;
(iii) அனுபவம்.

9. தற்போது இப் பிரதேச சபையில்/வேறு நிறுவனத்தில் பணி செய்பவராயின் :
   (i) தற்போது வகிக்கும் பதவி : ..............................................................................................................................................
   (ii) அப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ..................................................................................................................
   (iii) அப் பதவியின் தன்மை : ..................................................................................................................................
   (நிரந்தரம்/ தற்காலிகம்/ சேர்க்கப்பட்ட/ ஒப்பந்தம்).

10. நீங்கள் எப்போதாவது ஏதேனும் ஒரு நீதிமன்றத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா ?

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் சரியானவையென பகர்கின்றேன். ஆட்சேர்ப்பதற்கு முன்னர் இதில் ஏதேனும் பிழை என்று தெரியவரின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் எனவும், ஆட்சேர்ப்பின் பின்னர் தெரியவரின் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நன்கு அறிவேன்.

..........................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ................................................

ஏற்கனவே, அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு திணைக்களத் தலைவரின் சான்றிதழ். (மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்காக மட்டும்).

................................................. திரு./திருமதி/செல்வி இந்த திணைக்களத்தில் .............................. ஆக சேவையிலீடுபட்டுள்ளார். இப் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்களை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர்கள் 05 வருட சேவைக் காலத்திற்குள் எதுவித தண்டனைகளுக்கும் உட்படவில்லை என சான்று பகர்வதோடு, அவர்களினால் விண்ணப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை உறுதிப்படுத்தி முன் வைக்கின்றேன்.

திகதி : ................................................ ..........................................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

12-924

---

**தென் மாகாண அரச சேவையின் கொட்டபொல பிரதேச சபையின் வெற்றிடத்தை நிரப்புதல்**

கொட்டபொல பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு சேவைக்கு அமர்த்த உரிய தகுதி வாய்ந்தவர்களை தேர்ந்தெடுப்பதற்காக உரிய தகுதியுடையவர்களை தென் மாகாணத்தின் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதுண்டு.

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மாதாந்த சம்பள அளவு | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | சாரதி III தரம் | 02 | ரூபா 25,790.00-10X270-10X 300-10X330-12X350-ரூபா38990.00 (அ.பொது நி. சு. அ. 03/2016 இல் PL3 -2006) (அரச பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இன் உப அட்டவணை II இன் படியான சம்பள அளவுத் திட்டத்தில் அமைக்கப்படும். | (i) இரு அமர்வுகளுக்கு மேற்படாது க.பொ.த (சா.த.) பரீட்சையில் ஏதாவது 02 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>(ii) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். (மோட்டார் கோச் நிறை வாகன சாரதி உத்தரவுப் பத்திரம்)<br>(iii) உள்ளூராட்சி திணைக்களத்தின் (நிறுவனத்தின்) வெற்றிடமாகியுள்ள சாரதி பதவியின் போக்குவரத்து |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மாதாந்த சம்பள அளவு | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | செயற்பாடுகளை நிறைவேற்ற மற்றும் செயற்படுத்த முடியுமான விதத்தில் தேசிய தொழிற்துறை திறமைச் சான்றிதழ் (NVQ 04 ஆம் தரம்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>(iv) சாரதி உத்தரவுப் பத்திரத்தை பெற்றதன் பின் குறைந்தளவில் 03 வருட தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>***உடற்தகுதி:***<br>குறைந்தளவில் 05 அடி உயரமாக இருத்தல் வேண்டும். பகற் காலங்களில் மற்றும் இரவு காலங்களில் சேவை புரியக் கூடிய விதத்தில் உடல், உள ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும். கண் பார்வை சிறந்த நிலையில் இருத்தல் வேண்டும். அரச வைத்திய உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொண்ட வைத்தியச் சான்றிதழ் மூலம் உடல் நிலைமையை உறுதி செய்து கொள்ளலாம். |
| 02 | நிறை உபகரண வாகன செயற் பாட்டாளர் III ஆம் தரம் | 01 | ரூபா 25,790.00-10 x 270-10 x 300-10 x 330-12 x 350- ரூபா 38,990.00 (அ.பொ.நி. சு.அ. 03/2016 இல் PL3 -2006) (அரச பொது நிருவாக சுற்றறிக் கை இலக்கம் 3/2016 இன் உப அட்டவணை II இன் படியான சம்பள அளவுத் திட்டத்தில் அமைக்கப்படும். | (i) இரு அமர்வுகளுக்கு மேற்படாது க.பொ.த (சா.த.) பரீட்சையில் ஏதாவது 02 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>(ii) மோட்டார் போக்குவரத்து ஆணை யாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். (மோட்டார் கோச் நிறை வாகன சாரதி அனுமதிப் பத்திரம்).<br><br>(iii) உள்ளூராட்சி திணைக்களத்தின் (நிறுவனத்தின்) வெற்றிடமாகியுள்ள நிறை உபகரண வாகன செயற்பாடு களை நிறைவேற்ற மற்றும் செயற் படுத்த முடியுமான விதத்தில் தேசிய தொழிற்துறை திறமைச் சான்றிதழ் (NVQ 04 ஆந் தரம்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் .<br><br>(iv) சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்ற தன் பின் குறைந்தளவில் 03 வருட தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>(v) பெகொ இயந்திர செயற்பாடு, வீதி தகர்ப்பு இயந்திர செயற்பாடு, கம்பெக்டர் வாகன செயற்பாடு விசேட தகுதிகளாகும். |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மாதாந்த சம்பள அளவு | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | **உடற்தகுதி:** குறைந்தளவில் 05 அடி உயரமாக இருத்தல் வேண்டும். பகற் காலங் களில் மற்றும் இரவு காலங்களில் சேவை புரியக் கூடிய விதத்தில் உடல், உள ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். கண் பார்வை சிறந்த நிலையில் இருத்தல் |

**02. ஆட்சேர்ப்பதற்கு தேவையான பொது தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு தென் மாகாண வலுப் பிரதேசத்தில் தொடர்ந்து 05 வருட கால வதிவினை உறுதி செய்தல் வேண்டும்;

(iii) நன்னடத்தையுடையவராகவும், பதவியில் ஈடுபடக் கூடிய நல்ல சரீர சுகத்தையும் உடையவராக இருத்தல் வேணடும்;

(iv) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்;

(v) குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் நீதி மன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக அல்லது தண்டிக்கப்பட்டவராக அல்லது அரச/உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபன சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது;

(vi) பதவி ஏற்புக்கு தேவைப்படும் அனைத்து தகுதிகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

(vii) விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது இடைப்பட்ட காலப்பகுதியில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு, அறிவித்தலை இரத்துச் செய்தல், திருத்தி அமைத்தல் போன்ற அனைத்து தகுதிகளும் கொட்டபொல பிரதேச சபையின் தலைவரின் அதிகாரத்தின்படியேயாகும்.

03. உரிய சட்டவாக்க விதிக் கோவையின் பிரகாரம் ஒவ்வொரு பதவிக்குமான ஒழுங்கு முறையில் அமைந்த எழுத்து மூலப் பரீட்சை/ வாய் மூலப் பரீட்சை /உடற்பயிற்சி திறமை/ அமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சை/தொழிற்துறையிலான நேர்முகப் பரீட்சை ஆகிய ஒன்றுக்கு அல்லது பலவற்றுக்கு அல்லது அனைத்திற்கும் விண்ணப்பதாரிகள் முன்வைக்கப்படுவதோடு, அவற்றின் மூலம் பெறப்படும் அனைத்துப் புள்ளிகளின்படி தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர். (ஏதாவது விண்ணப்பதாரிகள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சமபுள்ளிகளைப் பெற்றிருப்பின் அவர்களில் தகுதியுடையவர் யார் என்பதை கொட்டபொல பிரதேச சபைத் தலைவர் அவர்களினால் தீர்மானிக்கப்படும்.

04. யாராவதொரு விண்ணப்பதாரியை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்ததுடன் பதவியேற்புக்கு தகுதியுடையவரென ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

05 தற்போது கொட்டபொல பிரதேச சபையில் இப் பதவிகளுக்காக கருதிட்ட/கொந்திராத்/பதிவு முறையில் சேவை புரிபவராயின் அதிக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

06. கொட்டபொல பிரதேச சபையின் வலுப் பிரதேசத்தில் வதியும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

07. **சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரம் மற்றும் ஓய்வூதிய சம்பளத் திட்டத்திற்கு உரித்து உடையதாகும். உங்களுக்காக ஓய்வூதிய சம்பளத் திட்டம் அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைகளுக்கு உடன்பட்டதாகும்;

(ii) பதவி 03 வருட பயிற்சி காலத்திற்கு உட்பட்டதாகும் 03 வருட காலம் முடிந்ததும் வேலை, வரவு மற்றும் நடத்தை நல்ல முறையில் அமையும் சேவையாளர்களுக்கு நிரந்தர பதவி வழங்கப்படும் இத்துடன் தகுதிகாண் காலப்பகுதி முடிவடைய முன் முதல் வினைத் திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்;

(iii) தென் மாகாண அரசாங்க சேவையின் உள்ளூராட்சி திணைக்கள நிறுவனங்களுக்கான சாரதிகள் தொடர்பான சாரதி சேவை சட்டவாக்கத்திற்கு மேலதிகமாக நிருவாகக் கோவையின் கட்டளைகளுக்கும் மற்றும் நிதிக் கட்டளைகளுக்கும், அரச மற்றும் தென் மாகாண மாகாண சபையினால் அடிக்கடி விதிக்கப்படும் கொள்கைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கு உரிய சட்டதிட்டங்கள் கொள்கைகள் என்பவற்றிற்கும் கொட்டபொல பிரதேச சபையினால் அடிக்கடி எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அனுசரித்து செயற்பட இணங்கியிருத்தல் வேண்டும்.

*08.* **ஆட்சேர்ப்பு முறைகள் மற்றும் விண்ணப்பங்கள் முன்வைத்தல் :**

(i) முறையான நேர்முகப் பரீட்சை மூலம் தகுதி வாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(ii) இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய A4 அளவிலான கடதாசியில் தங்களால் தயாரித்த விண்ணப்பப்படிவம் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் போடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

(iv) இரு பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(v) விண்ணப்பப்படிவங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதியை சான்றுப்படுத்தி அனுப்பப்பட வேண்டியதுடன் நேர்முகப் பரீட்சையின் போது மூலப் பிரதிகள் முன்வைக்கப்படல் வேண்டும்.

(a) பிறப்புச் சான்றிதழ்;
(b) தேசிய ஆள்அடையாள அட்டை;
(c) கல்விச் சான்றிதழ்;
(d) தொழில் பயிற்சிச் சான்றிதழ் மற்றும் வேறு திறமைச் சான்றிதழ்;
(e) வதிவினை உறுதிப்படுத்த பெற்றுக்கொண்ட சான்றிதழ்;
(f) சமீப காலத்தில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் 03, ஒன்று கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

(vi) அனைத்து விண்ணப்பப்படிவத்தினையும் உரிய முறையில் தயாரித்து பூர்த்தி செய்து 2019.01.14 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும் விதமாக பதிவுத் தபால் மூலம் "கொட்டபொல பிரதேச சபை, கொட்டபொல" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(vii) தாமதமாகி அல்லது நிபந்தனைகளுக்கு உட்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதுண்டு.

*09.* உரிய தகுதிகளை பூர்த்தியாக்கிய விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகுதியற்றவர்களுக்கு எந்த வித அறிவித்தலும் விடுக்கப்படமாட்டாது.

விண்ணப்பப்பதாரிகளால் முன்வைக்கப்பட்ட அனைத்து விபரங்களும் சான்றுப்பத்திரங்களும் பொய்யானது என தெரியவ வந்தால் அல்லது விண்ணப்பதாரி வேண்டுமென நினைத்து ஏதாவது முக்கிய தகவல்களை மறைத்திருப்பதாக தெரிய வந்தால் ஆட்சேர்ப்புக்கு முன் விண்ணப்பதாரி தகுதியற்றவர் என கருதுவதோடு ஆட்சேர்ப்பின் பின்னர் தெரிய வந்தால் எந்தவித தண்டப்பணமுமின்றி இரத்துச் செய்யப்பட வேலையிலிருந்து நீக்கப்பட ஏதுவாகும் என நான் அறிந்து கையொப்பமிடுகின்றேன்.

ஏ. பீ. தயாநன்த,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை,

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டபொல ,
2018, ஒற்றோபர் 15.

மாதிரி விண்ணப்படிவம்

**கொட்டபொல பிரதேச சபை**

.............................................. பதவி

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் : ..........................................................................

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :...............................................................................

3. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்:.....................................................................................

4. நிரந்தர விலாசம் : ..........................................................................................

5. பால் (ஆண்/பெண்) : ..........................................................................................

6. பிறந்த திகதி : ஆண்டு :..................... ...... மாதம் : ............................. திகதி : .............................

7. 2019.01.14 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : ..................... மாதங்கள் :.................. நாட்கள் : ...............

8. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

9. நீர் ஓர் இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பிரசையா உரிமை மூலமா? பதிவின் மூலமா?: .......................................

10. திருமணமானவரா? /திருமணமாகாதவரா? :- ...............................................................

11. கொட்டபொல பிரதேச சபை வலுப்பிரதேசத்தில் வதிவு காலம்: ...............................................................

12. கல்வித் தகைமைகள் :..........................................................

13. தொழிற் தகைமைகள் : ..........................................................

14. சேவைத் திறன் : ..........................................................

14. வேறு விசேட தகைமைகள் :..........................................................

இங்கு கீழே என்னால் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானதும், அதில் எதுவும் பிழை இல்லை எனவும் சான்றுப்படுத்துகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக என்னால் தரப்பட்ட தகவல்கள் பிழையானது எனத் தெரிய யவந்தால், எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின் தெரிய வந்தால் எனது நியமனம் எந்தவித தண்டப்பணமுமின்றி இரத்துச் செய்யப்படவும் வேலையிலிருந்து நீக்கப்படவும் ஏதுவாகும் என நான் அறிந்து கையொப்பமிடுகிறேன்.

.......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : .................................

12- 939